| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி | | |
| முதலாம் தவணைப்பரீட்சை - 2019 | | |
| தரம் -08 | சைவநெறி | நேரம் : 2 மணித்தியாலம் |

## பகுதி I

❖ சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

1) சைவசமயத்தர் காரிய சித்திக்காக வணங்கும் தெய்வம்
1. சிவபெருமான் 2. முருகன் 3. விநாயகர் 4. விஷ்ணு

2) கடவளின் உண்மைத் தன்மையை விளக்கும் உபநிடதம்.
1. கட உபநிடதம் 2. முண்டக உபநிடதம்
3. மாண்டுகிய உபநிடதம் 4. சாந்தோக்கிய உபநிடதம்

3) பஞ்ச கிருத்தியத்தை உணர்த்தும் மூர்த்தம்.
1. சந்திரசேகர மூர்த்தம் 2. நடராஜ மூர்த்தம்
3. இலிங்கோற்பவ மூர்த்தம் 4. தட்சணா மூர்த்தி

4) மும்மலங்களில் இருந்து நீங்கி இறைவனிடம் ஒடுங்குவதற்கு சிறந்த இடம்.
1. ஆலயம் 2. வீடு 3. பாடசாலை 4. பொது இடம்

5) மனித உடலமைப்பில் கழுத்து குறித்து நிற்கும் ஆலய மண்டபம்.
1. அர்த்த மண்டபம் 2. மகா மண்டபம்
3. தர்சன மண்டபம் 4. வசந்த மண்டபம்

6) "கோபுரம்" விளக்கும் தத்துவம்
1. பிரபஞ்ச இயக்கம் 2. உயிர்களின் இயக்கம்
3. மூலாதார இயக்கம் 4. பதியின் இயக்கம்

7) ஆன்மாக்கள் எப்போதும் இறைசிந்தனையுடன் இருக்க வேண்டும். என்பதை உணர்த்தி நிற்பது,
1. பலிபீடம் 2. நந்தி 3. கொடிமரம் 4. கோபுரம்

8) திருநாவுக்கரச சுவாமிகள் கடைப்பிடித்த மார்க்கம்.
1. சக மார்க்கம் 2. தாசமார்க்கம் 3. சன்மார்க்கம் 4. சற்புத்திர மார்க்கம்

9) திரி கரணங்கள் எனப்படுபவை
1. மனம், மொழி, மெய் 2. பதி, பசு, பாசம்
3. ஆணவம், கன்மம், மாயை 4. சூரியன், சந்திரன், அக்கினி

10) மண்ணில் நல்ல வண்ணம் ........ என்ற தேவாரத்தின் பண்.
1. குறிஞ்சி 2. பஞ்சமம் 3. கொல்லி 4. காந்தார பஞ்சமம்

11) திருமருகலில் எழுந்தருளி அருள்பாலிக்கும் அம்மன்.
1. பெரியநாயகி 2. வண்டுவார் குழலி 3. சிவகாமசுந்தரி 4. ஓசைகொடுத்த நாயகி



kalvi.lk

12) திருச்செங்காட்டங் குடியில் வாழ்ந்த நாயனார்.
1. சிறுத்தொண்ட நாயனார்
2. அப்பூதியடிகள்
3. அபிராமிப் பட்டர்
4. திருநாவுக்கரசர்

13) அளப்பரும் கரணங்கள் நான்கும் ....... என மனக் கட்டுப்பாடு பற்றிக் கூறியவர்.
1. ஆறுமுகநாவலர்
2. சேக்கிழார்
3. கச்சியப்ப சிவாச்சாரியர்
4. அருணகிரிநாதர்

14) சிவ ஆலயத்தில் கருவறையின் மேற்கு சுவரில் எழுந்தருளி இருக்கும் மூர்த்தம்.
1. தட்சணா மூர்த்தம்
2. நடராஜ மூர்த்தம்
3. இலிங்கோற்பவ மூர்த்தம்
4. சிவ மூர்த்தம்

15) நமஸ்காரத்தின் போது கால்கள் நீட்ட வேண்டிய திசைகள்.
1. மேற்கு, தெற்கு 2. தெற்கு, வடக்கு 3. மேற்கு, வடக்கு 4. வடக்கு, கிழக்கு

16) சீர்காழிக்கு வழங்கும் மறுபெயர்.
1. தில்லை 2. சிதம்பரம் 3. கோயில் 4. திருக்கழுமலம்

17) திருநாவுக்கரசு நாயனார் திருமறைக்காட்டு கதவு திறக்கப்பாடிய பதிகம்.
1. பெருகலாம் தவம் ........
2. கூற்றாயினாவறு .........
3. பொன்னார் திருவடிக்கு .....
4. பண்ணினோ மொழியாள் ......

18) ஆலய கிரியைகள் பற்றி விரிவாகக் கூறும் நூல்,
1. வேதம் 2. ஆகமம் 3. உபநிடதம் 4. புராணம்

19) பன்னிரு வருடத்திற்கு ஒருமுறை நிகழும் நைமித்திய கிரியை.
1. மாசிமகம் 2. பிரதோஷம் 3. மகாமகம் 4. மகோற்சவம்

20) ஆன்மாவின் இறுதி இலட்சியம்.
1. பணம் சம்பாதித்தல்
2. நீண்ட அயுளுடன் வாழ்தல்.
3. முத்தியடைதல்
4. பொருள்தேடல்

(20 x 2 = 40 புள்ளிகள்)

## பகுதி II

❖ முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களிற்கு விடை தருக.

1) பின்வரும் பதிகங்கள் இரண்டினை வரிக்கிரமாக எழுதி பாடியவர், தலம் என்பவற்றையும் தருக.
   1. மண்ணில் நல்ல ..................
   2. கற்றாங்கு எரியோம்பிக் ...............
   3. பண்ணின் நேர் .................
   4. பெருகலாம் தவம் ...............

(2 x 8 = 16புள்ளிகள்)

2) **“அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது”**
   1. விழுமியம் என்பதன் பொருள் விளக்கம் யாது?
   2. மனக்கட்டுப்பாட்டிற்கான சாதனங்கள் 2 தருக?
   3. கொடையால் உயர்ந்தவர்களையும் அவர்கள் மேற்கொண்ட செயல்களையும் தருக.
   4. சிரவணன் கதையினை சுருக்கமாகத் தருக.

(2+2+3+4 = 11 புள்ளிகள்)

3) **“எல்லா உலகமும் ஆனாய் நீயே”.**
   1. இறைவன் கடவுள் என அழைக்கப்படுவதற்கான காரணம் யாது?
   2. கடவுள் உண்மைத் தன்மை பற்றி விளக்கும் நூல்கள் 2 தருக.
   3. கடவுளின் உண்மைத் தன்மையினை உப்புக்கல் ஆலம் விதையின் உதவியுடன் விளக்குக.
   4. ஆலய அமைப்பினை மனித உடலுடன் ஒப்பிட்டு விளக்குக.

(2+2+3+4 = 11 புள்ளிகள்)

4) **“மனித வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்தவை சடங்குகள்”**
   1. நாள்மங்கலம் என்பதனை விளக்குக.
   2. வாழ்வில் ஒருமுறை மட்டும் நிகழும் சடங்குகள் 4 தருக.
   3. நாள் மங்கல நாளில் தவிக்க வேண்டிய விடயங்கள் 3 தருக.
   4. நாள் மங்கலத்தை சிறப்பாக கொண்டாடும் முறையினை சுருக்கமாக விளக்குக.

(2+2+3+4 = 11 புள்ளிகள்)

5) **“ஆலயம் தொழுவது சாலவும் நன்று”**
   1. ஆலயக் கிரியையை வகைப்படுத்துக?
   2. விசேட காலத்தில் இடம்பெறும் கிரியைகள் 4 தருக.
   3. நமஸ்கார வகைகளை குறிபிபட்டு விளக்குக.
   4. காமிய கிரியை வகைப்படுத்தி விளக்குக.

(2+2+3+4 = 11 புள்ளிகள்)

6) பின்வருவனவற்றுள் இரண்டிக்கு சிறுகுறிப்பு எழுதுக.
   1. ஆலயம்.
   2. ஈகை
   3. பாடசாலை ஒழுக்கம்.
   4. திருமுறைகள்

(5 ½ x 5 ½ = 11 புள்ளிகள்)



kalvi.lk

# ONLINE CLASSES

## TAMIL MEDIUM

அனைத்து பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்....

GRADE 8

**திறமை வாய்ந்த ஆசிரியர்களினூடான சிறந்த வழிகாட்டலுடன் கூடிய வினைத்திறன் மிக்க நிகழ்நிலை வகுப்புகள்.**

FREE ADMISSION

**075 287 1457**

| | | |
|---|---|---|
| தமிழ் | வரலாறு | சுகாதாரம் |
| விஞ்ஞானம் | English | புவியியல் |
| கணிதம் | ICT | குடியியல் |

- **Spoken English Classes.**
- **Sinhala Reading and Writing Classes.**
- **Map Marking Classes**

**தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.**

**Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும். (தனிப்பாட அனுமதிகளையும் பெற்றுக்கொள்ள முடியும்)**



கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page